# மக்கள் மறு வாழ்வு

மலர்: 4] கார்த்திகை-நவம்பர் 1985 விலை: 75 காசு [இதழ்: 2




இந்த
சின்னப் பூவின்
புன்னகையை
யார் திருடியது?

○

பாலஸ்தீனம்
எத்தியோப்பியா
ஈழம்....
ஓ !
எத்தனை நாடுகளின்
குழந்தைகள்
இவ்விதம் ஆனதோ ?

○

மனித இனம்
செத்துத் தொலைவதால்
எத்தியோப்பியா
இங்கு
வெளிச்சமிடும் !

○

ஈழப் பூக்களோ
சொந்த மண்ணில்
இரத்தத் தடாகத்தில்
மூழ்கித் திணறும்.

(4-ம் பக்கம் பார்க்க)

# தாயகம் திரும்பியோர் - அகதிகள் தினமாக டிசம்பர் 15-ந் தேதியை கடைபிடியுங்கள்!

**''அவ்வப்போது அமைதியாக குரல் எழுப்புவதைவிட ஒரே நேரத்தில் ஒருமித்த குரல் எழுப்புவது எழுச்சியும் பயனும் மிக்கதாக இருக்கும்-அந்த வகையில் டிசம்பர் 15-ந் தேதியை தாயகம் திரும்பியோர்-அகதிகள் தினமாக கடைப்பிடிக்க வேண்டும்''**

தாயகம் திரும்பியோருக்காகவும் அகதிகளுக்காகவும் பணி செய்யும் 'டெக்ராஸ், என்ற அமைப்பு டிசம்பர் 15ந் தேதியை தாயகம் திரும்பியோர்-அகதிகள் தினமாக் கடைப்பிடிக்க வேண்டுமென தீர்மானித்தது.

அதன் வேண்டுகோளை செவிமடுத்து அத்தினத்தை தமிழ்நாட்டிலும், இந்தியாவின் பிறமாநிலங்களிலும் குடியேறியுள்ள தாயகம் திரும்பியோர் அகதிகள் கடைப்பிடிக்க வேண்டும்.

இத்தினத்தில் அங்காங்கே இருக்கும் தாயகம் திரும்பியோர்-அகதிகள் அத்தினத்தில் கூட்டங்கள் போட வேண்டும்; ஊர்வலங்கள் நடத்த வேண்டும். துண்டு பிரசுரங்கள் வெளியிட வேண்டும்; மாநில-மத்திய அரசுக்கு மட்டுமல்ல; இலங்கை அரசுக்கும் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட அனைத்துநிறுவனங்களுக்கும் தமதுகோரிக்கைமுன் வைக்க வேண்டும்.

கூட்டங்கள் மூலம், ஊர்வலங்கள் மூலம் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் மூலம் கோரிக்கைகள் மூலம் தாயகம் திரும்பியோர்-அகதிகள் பிரச்சனைகளை வெளிக்கொணர வேண்டும்.

தாயகம் திரும்பியோர்-அகதிகள் பற்றியும் அவர்களது பிரச்சனைகள் குறித்தும் நாடிழந்து உரிமைகளை இழந்து எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிக் கொண்டிருக்கும் நிலை குறித்தும், அடிமையாக இவர்களது பிரச்சனைகள் தீர்க்கவேண்டியதன் அவசியம் குறித்தும் - இப்பிரச்சனைக்கு மூலகாரணமாகவும் அவர்களது உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் நடத்தப்படும் இலங்கைத் தமிழர் போராட்டத்தின் வெற்றியின் அவசியம் பற்றியும், இப்பிரச்சனை உடனடியாக தீர்க்க வேண்டிய அவசரம் பற்றியெல்லாம் விளக்க வேண்டும்.

தாயகம் திரும்பியோர் மத்தியில் பல்வேறுபட்ட அமைப்புகள், சங்கங்கள், இயக்கங்கள் பணியாற்றி வருகின்றன. இவைகள் ஆங்காங்கேயிருந்து தனியாக, ஒருங்கிணைந்தோ இத்தினத்தை எழுச்சித்தினமாக மாற்றவேண்டும்.

அவ்வப்போது- ஆங்காங்கே சிறு சிறு குரலாக ஒலிப்பதைவிட இது போன்ற ஒரு தினத்தில் அனைவரும் கூட்டு மொத்தமாக குரல் எழுப்புவதன் மூலம் அது உலகளாவ கேட்கும் என்பதோடு தாயகம் திரும்பியோர்-அகதிகள் பிரச்சனைக்கு தீர்வு காணவும், நீதிக்காகப் போராடவும் குரல் கொடுப்பார்கள் என்பது திண்ணம். ○

---

**சுயமாக**
**தொழில்**
**செய்யலாம்**

★

புதிய பகுதி

✳

**விபரம்**
**உள்ளே**

மக்கள் மறுவாழ்வு

மலர்: 4 கார்த்திகை '85 இதழ்: 2

# வெண்ணெய் திரட்டும் முயற்சியில்...

வெண்ணெய் திரல்கிறதோ, இல்லையோ வெண்ணையை திரட்டும் முயற்சியில் தாழியை உடைத்து விடக்கூடாது— இதுதான் இன்றைக்கு இலங்கையில் தமிழர் பிரச்சனையின் நிலைமை.

இலங்கை தமிழர் குறித்து பிரச்சனை பேசப்பட்டு வருகிறது. தீர்வு எப்போது? எப்படி இருக்கும்? என்ற நிலையில் இருந்தாலும் தீர்வுக்கான முயற்சிகள் மிகப் பிரயாசத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த தருணத்தில் தாழியை உடைத்த கதையாக சம்பந்தப்பட்டவர்கள் நடந்துவிடக் கூடாது என்பது எமது எண்ணம்.

ஒரு புறத்தில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னனி; இன்னொரு புறம் ஆயுதம் தாங்கும் ஈழ விடுதலை போராளிகள்; அவர்களுக்குள்ளும் ஒவ்வொருபுறம்; இன்னொருபுறம் மலையகத்தில் தொண்டமான் போன்றவர்கள்; வேறு புறம் தமிழ், முஸ்லிம் தலைவர்கள். இவர்களுக்கு தகுந்த மாதிரி தமிழகத்தின் அரசியல் கட்சிகள், அமைப்புகள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான தீர்வு முன் வைக்கிறார்கள். மனம் போனபடி செயல்படும் போக்கு; அந்த போக்கினால் இவற்றிற்கிடையில் கசப்பான சம்பவங்கள்.

இவற்றின் செயல்களினால் எங்கே வெண்ணெய்யை திரட்டும் முயற்சியில் தாழியை உடைத்து விடுவார்களோ என்ற கவலை.

இதை அனைவரும் உணர்வார்கள்! வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுபோல சொந்த கருத்துக்களை—குரோதங்களை ஒருபுறம் வைத்துவிட்டு— 'கூர்மையான வேற்றுமை' களை கருத்தில் கொள்ளாமல், முதலில் பிரதான மான நலன்களை முன் வைத்து முயன்றால் தீர்வு காணலாம். ○

# மண்டபம் முகாமில் அகதிகள் அவதி

இலங்கைத் தமிழர் விடுதலைக்காக தமிழகத்தில் பெரும் ஆதரவு காட்டப்பட்டு வருகிறது. ஆனால் அங்கிருந்து சிங்கள இராணுவத்தினருக்கும், குண்டர்களின் கொடுமைகளுக்கும் பயந்து தமிழகத்தில் தஞ்சம் புகும் இலங்கை தமிழ் அகதிகளை தமிழக அரசு அதிகாரிகளோடு வேண்டா வெறுப்பாக வரவேற்கிறார்கள் — கேவலமாக நடத்துகிறார்கள்.

இலங்கையிலிருந்து அகதிகளாக வரும் தமிழர்கள் இராமேஸ்வரம் வழியாக மண்டப முகாம் வந்து தங்க வைக்கப்படுகிறார்கள். இங்கு இடம் நெருக்கடியானபடியால் இவர்கள் இங்கிருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

இவ்வாறு அகதிகளை பிற இடங்களுக்கு அனுப்பி வைப்பதில் பல்வேறு முறைகேடுகள் நடந்து வருகிறது. அதிகாரிகள் இலங்கையில் அல்லலுற்று வரும் அகதிகளை பாரதூரமாக ஏசுவதோடு தகாத சொற்களாலும் திட்டுகிறார்கள்.

வரும் அகதிகள் பெரும்பாலும் நன்கு படித்து நல்ல நிலையில் உள்ளவர்கள். இவர்களை அடிமைகளை விட கேவலமாக நடத்துகிறார்கள். அதிகாரிகளுக்கு சாதகமாக நடப்பவர்களை (விலை உயர்ந்த பொருட்களைக் கொடுப்பவர்கள்) முகாமில் பல மாத காலமாக வைத்துக் கொள்கிறார்கள், சில வேளைகளில் மத்திய மாநில அரசு அதிகாரிகள் வரும்போது அகதிகளை பேட்டி காண்பதற்கு இவர்களையே ஏற்பாடு செய்கிறார்கள்.

இவர்களில் சிலர் இந்திய அரசுக்குவிரோதமான கள்ளக் கடத்தல்போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள். இவர்கட்கு இங்கு உள்ள அதிகாரிகள் துணை நிற்கிறார்கள். இவர்கள் பணமாகவோ அல்லது விலையுயர்ந்த பொருட்களையோ கொடுப்பதால் இவர்களை முகாமை விட்டு வெளி மாவட்டங்களுக்கு அனுப்புவதில்லை.

ஆனால் அப்பாவியாக வருபவர்களை அனுப்பிவிடுகிறார்கள். சில குறிப்பிட்ட குவாட்டர்ஸ்களில் அவர்கள் பலமாத காலமாக தங்கி இருக்கிறார்கள். சில அப்பாவிகள் குடும்பத்தைப் பிரித்து தனித்தனியாக வரும்அகதிகளிடம் நமது பெற்றோர் வரும் வரை இங்கு தங்க அனுமதி கேட்டால் கொடுப்பதில்லை.

இங்கு அகதிகளுக்காக தென்னிந்திய திருச்சபையின் தொழிற்பயிற்சிஒன்று நடந்து வருகிறது இதில் படித்து வரும் மாணவர்கள் குடும்பத்தை கடந்த 5 மாத காலமாக வேறு எங்கும் அனுப்பாமல் வைத்திருந்தார்கள். ஆனால் 1-10-85ல் சிலரை அனுப்பி வைத்தார்கள். அவர்கள் பயிற்சி முடிய இன்னும் 1 மாத காலம் இருக்கிறது. அதுவரை தங்கியிருக்க இடம் கேட்டும் கொடுக்காமல் பஸ் ஏற்றி அனுப்பிவிட்டார்கள்.

காரணம் கேட்டால் இட நெருக்கடி என்று கூறும் அதிகாரிகள் முற்றிலும் தனியாரால் நடத்தப்படும் தனியார் சிற்றுண்டிச்சாலைக் மூன்று அறைகளைக் கொடுத்துஇருக்கிறார்கள். (கட்டிட எண்158) இங்கு பணிபுரிந்து வரும் பல்வேறு சமூக சேவை நிறுவனங்களுடனும் அதிகாரிகள் முறைகேடாக நடந்து கொள்கிறார்கள். 1-ம் தேதி கொடுக்க வேண்டிய செலவு பணத்தை பஸ ஏறினால்தான் பணம் என்று கூறி காலதாமதம் செய்து கொடுக்கிறார்கள்.

—ஓர் அகதி

# 'தாயகம் திரும்பியோர் நலனே முக்கியம்'

## மறுவாழ்வு இயக்குனர் கருத்து

"தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி தாயகம் திரும்பியோர்களின் நலனுக்காகவே இருக்கிறது ஆனால் தாயகம் திரும்பியோர்களின் பெயர்களைச் சொல்லி பல தனியார் நிறுவனங்கள் கடன் பெறுகிறார்கள். ஆனால் அவர்கள் தாயகம் திரும்பியோர் நலனைப் பற்றி அக்கறை காட்டுவதில்லை,"

இவ்வாறு மறுவாழ்வு இயக்குனரும், தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் தற்போதைய நிர்வாக இயக்குனருமான திரு. குருமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

"தனியார் நிறுவனங்களுக்கு கடன் கொடுக்கும்போது அது கடன் கொடுத்த பணத்திற்கும் பாதுகாப்பு இல்லை; தாயகம் திரும்பியோர்களின் நலனுக்கும் பாதுகாப்பில்லை. தனியார் நிறுவனங்கள் கடன் பெற்று சிறிது காலத்திற்கு தாயகம் திரும்பியோர்களை வேலைக்குவைத்திருக்கின்றன பிறகு அவர்களை வேலையில் இருந்து நீக்கிவிடுகின்றன.

எனவே இம்மாதிரி தனியார் நிறுவனங்களுக்கு கடன் கொடுப்பதைவிட அரசுக்கு சொந்தமான பொது நிறுவனங்களுக்கு கடன் கொடுப்பதால் தாயகம் திரும்பியோர்களின் வாழ்வுக்கும் உத்தரவாதம்; அவைகளுக்காக வழங்கும் கடன்களுக்கும் உத்தரவாதம்.

ஆனால் இதுமாதிரி தனியார் நிறுவனங்களுக்கு கடன் கொடுப்பதை விடுத்து அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு கொடுக்கவே முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம்" என்றும் தெரிவித்தார்.

மேலும் தாயகம் திரும்பியோர்களை அண்டிச் சுரண்டி வாழும் இடைத் தரகர்களைப் பற்றியும் தெரிவித்தார்.

"இந்த இடைத்தரகர்களால் தாயகம் திரும்பியோர்களுக்கு கொடுக்கப்படும் வியாபாரக் கடன் வீட்டுக் கடன்கள் முழுமையாகப் போய் சேர்வதில்லை.

இடைத் தரகர்களே அவற்றை அனுபவிப்பதோடு மாத்திரமல்ல; தாயகம் திரும்பியோரும் தானாக சென்று அவர்களிடம் சிக்கிக்கொள்கிறார்கள். ஏதாவது கிடைத்தால் பொதுஎன்று அவர்களை அணுகுகிறார்கள்.

"எனவே இந்த நிலையை மாற்றவேண்டும். ஆதலால் தான் தாயகம் திரும்பியோர்களுக்கு கொடுக்கும் வீட்டுக் கடனை வீட்டு வசதி வாரியம் போன்றவற்றிடம் கொடுத்து அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கக்கூடிய வசதியை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொண்டு வருகிறேன்" என்றும் மறுவாழ்வு இயக்னர் தெரிவித்தார். ○

# தொண்டமான் யோசனையை நிராகரித்தனர்

இலங்கைத் தமிழ் பிரச்சனைக்கு தீர்வுகாண கிராமப்புற தொழில்கள் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவருமானதொண்டமான் தெரிவித்திருந்த யோசனையையும் இலங்கை எதிர்க்கட்சியினர் நிராகரித்து விட்டனர்.

தமிழர் பிரச்சனைக்கு தீர்வு கான இடைக்கால ஏற்பாடாக ஜயவர்த்தனா அரசின் சார்பில் 5 பிரதிநிதிகளையும், ஈழ தமிழர் அமைப்புகளின் சார்பில் 5 பிரதிநிதிகளையும் கொண்ட, தேசீய இணைக்கக் கவுன்சில் ஒன்றை அமைக்க வேண்டும் என்று தொண்டமான் யோசனை தெரிவித்திருந்தார்.

இந்த யோசனையை எதிர்க்கட்சிகள் நிராகரித்துவிட்டன. அதுபோன்ற அரசு உருவாக வேண்டுமானால் தமிழர் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் இருக்கவேண்டும். இதற்காகத் தான் பொது தேர்தல் நடத்தும்படி நாங்கள் கூறுகிறோம் அதுபோன்ற பிரதிநிதித்துவத்தை பொது தேர்தல் மட்டுமே கொண்டுவர முடியும்" என்று சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைவியும், முன்னாள் பிரதருமானசிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

"இதுபோன்ற யோசனையைத் தெரிவித்துள்ளதில் இருந்து, நெருக்கடியைத் தீர்க்க இயலாத நிலையில் தற்போதைய அரசு இருக்கிறது" என்று இலங்கை சம சமாஜக் கட்சியின் தலைவர் கொல்வின் ஆர். டி. சில்வா தெரிவித்துள்ளார்.

''அதுபோன்ற அரசு அமைவது தமிழர் பிரச்சனைக்கு தீர்வு ஆகாது என்று கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த எம்.பி. சரத்முத்தட்டுகம கருத்துத் தெரிவித்துள்ளனர். ○

# அதிகாரிகள் மனிதாபிமானம் காட்டுவதில்லை

'சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தாயகம் திரும்பியோர் பிரச்சனைகளை மனிதாபிமானத்தோடு பார்ப்பதில்லை; சொந்த சுய நலன்களுக்காக தாயகம் திரும்பியோர்களுக்கு மத்தியில் சண்டை, சச்சரவு உருவாக சூழ்நிலைகளை உருவாக்கி விடுகிறார்கள். உள்ளூர் மக்கள் மத்தியில் தாயகம் திரும்புவோர் பற்றி தப்பான அபிப்பிராயங்கள் வளர சூழ்நிலைகளை ஏற்படுத்தி விடுகிறார்கள்.

இவ்வாறு தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணி சம்மேளனத்தின் நீலகிரி கிளைகளின் பிரதிநிதி எம்.பி. துரை தெரிவிக்கிறார்.

மேலும்'தாயகம் திரும்பியோர் இந்த நாட்டின் வம்சாவழி மக்கள்இந்த நாட்டில் வாழும் உரிமை படைத்தவர்கள். அரசின் அனைத்து உரிமைகள், சலுகைகளை இவர்களும் அனுபவிக்க சமமான உரிமையுண்டு.

அப்படி இருந்தும் இவர்களுக்கு மறுவாழ்வு உதவிகள் அளிக்க வேண்டிய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதை உணர்வதில்லை. இவர்களை வேண்டத்தகாதவர்களாக அன்னியர்களைப்போல் பார்க்கிறார்கள். அதுமட்டுமல்ல பணத்திற்காகவும் நியாயங்களுக்கு புறம்பான காரியங்களை ஆற்றவும் முயற்சிக்கிறார்கள். உள்ளூர் மக்களோடு மோதவிட்டு வேடிக்கைப் பார்க்கும் சூழ்நிலைகளையும் உருவாக்கிவிடுகிறார்கள்.

கொணவாக்கரையில் 160 தாயகம் திரும்பியோர் குடியிருப்புகளை உள்ளூர் வாசிகளால் உடைக்கப்பட்டன. கேத்தி கிராமத்தில் நிதி அமைச்சரே பட்டா வழங்கி கட்டப்பட்ட 60 வீடுகள் உடைத்து நொறுக்கப்பட்டு அவர்களது உடமைகள் சூறையாடப்பட்டன. இதுபோல பல இடங்களில் நடந்துள்ளன.

இந்த சம்பவங்களையொட்டி இந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதோடு இந்த சம்பவங்கள் நடக்க ஆதரவாக இருக்க காரணமாகவும் இருந்திருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் காரணம் பணம்தான்.

கொஞ்சம்கூட மனிதாபிமானம், சேவா உணர்வோடு

(11-ம் பக்கம் பார்க்க)




## ஆந்திராவில் நாங்கள்...

நாங்கள் ஆந்திர மாநிலம் நெல்லூர் வேதபாளையம் என்ற இடத்திலுள்ள மின்தறி மில்லுக்குவேக்லைகாக அனுப்பப்பட்டோம். இதில் 180 தொழிலாளர்கள் தொழில் புரிகிறார்கள். நாட் கூலியாக ரூ. 12-00 வழங்கப்பட்டு வந்தது.

கடந்த நான்கு மாத கால மாக மில் மூடப்பட்டு விட்டது. நான்கு மாதங்களாக எந்த ஒரு ஊதியமும் இல்லை.

இந்த மில்லில் தொழில் செய்த தொழிலாளர்கள் அனைவரும் -1983ம் ஆண்டிலிருந்து போராடி வருகிறோம் தமிழ்நாட்டில் சென்னைவந்து கூட எங்கள் கோரிக்கைகளை முன் வைத்து போராடினோம் அதன் பலன் 1983ம் ஆண்டு மேமாதம் 18ந்தேதி சென்னை மத்திய சிறையில் கூட (128 தொழிலாளர்கள்) அடைக்கப் பட்டோம்.

இப்போது தொழிற்சாலை முற்றாக மூடப்பட்டு விட்டது. பலமுறை நெல்லூர் ஆட்சி யாளரை சந்தித்தோம்; கொடி பிடித்து ஊர்வலமும் நடத்தி விட்டோம். ஒவ்வொரு முறையும் ஆட்சியாளர், 'கொடி பிடித்துக் கொண்டு வராதீர்கள், போராடாதீர்கள். உங்கள் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கிறேன்' என்பார். ஆனால் முடிந்தபாடில்லை,

இந்தப் பிரச்சனை குறித்து ஆந்திர முதல்வர்க்கு மட்டுமல்ல; தமிழ்நாட்டு முதவல்ர் மறுவாழ்வு இயக்குனர் எல்லோருக்கும் எழுதிவிட்டோம். இதுவரை எந்த முடிவும் இல்லை.

நாங்கள்இலங்கையிலிருந்து கொண்டு வந்திருந்த நகை நட்டு எல்லாவற்றையும் கூட விற்று சாப்பிட்டாகி விட்டது.

மில்லும் திறக்கப்பட வில்லை; வேறு வேலையும் கிடைத்தபாடில்லை; சிலர் ரிக்ஷா இழுத்து சிரமத்துடன் வாழ்கிறார்கள், ஒரு சில குடும்பங்களிலுள்ள 12 வயதுக்கும் குறைந்த சின்னஞ்சிறு பிள்ளைகள் கூட பெரிய வீடுகளில் மிகவும் கேவலமான வேலைகள் செய்து வயிற்றை கழுவுகிறார்கள்.

என்று தீரும் எங்கள் பிரச்சனை என்றுதான் தெரிய வில்லை.

—செல்வராஜ

நெல்லூர்
ஆந்திர மாநிலம்

★

## மீண்டும் வேலை கிடைக்குமா?

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி திட்டத்தின் கீழ் எனக்கு வேலை வழங்கப்பட்டது. 11-4-84 அன்று திருச்சி முகாமிலிருந்து நானும் என்னுடன் 13 குடும்பங்களும் கர்னாடகா மாநிலத்திற்கு அனுப்பப்பட்டோம்.

அங்கு ஹாசன் மாவட்டத்தில் ஓர் இடத்திற்கு (காட்டுப் பகுதி) அழைத்துச் செல்லப் பட்டோம். அங்கு எங்களுக்கு வேலை வழங்கப்படும் என்று சொன்னார்கள்.

நாங்கள் சென்ற சில நாட்கள் வரை எங்களுக்கு வேலை வழங்கியதாக இல்லை; அந்த நம்பிக்கையும் போனதால் நாங்கள் திரும்பி வந்து கூட்டுறவு வங்கியிடம் முறையிட்டோம். ஆனால் வங்கி எங்களுக்கு வேறு வேலை கொடுப்பதற்கு மறுத்து விட்டது.

நாங்கள் ஒன்றும் செய்ய முடியாத சூழ்நிலைக்கு தள்ள பட்டோம். பின்னர் மதுரையிலுள்ள தாயகம் திரும்பியோர் சங்கம் ஒன்றின் மூலமாக கேட்டுக் கொண்டதால், எங்கள் அனைவருக்கும் வேலைத் தருவதாகக் கூறி பெரியார் மாவட்டத்திலுள்ள தவிட்டுப் பாளையம் என்ற இடத்திற்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு (சண்முகசுந்தரம் டெக்ஸ்டைல்ஸ்) அனுப்புவதற்கான ஆர்டர் வழங்கப்பட்டது.

ஆனால் ஒரு சிலருக்கு குறிப்பிட்ட நாளில் ஆர்டர் கிடைக்கவில்லை. 5 தினங்கள் கடந்து கிடைத்தது, அப்படி காலம் கடந்த நாங்கள் உடனடியாக சென்று அந்த நிறுவனத்தின் நிர்வாகத்தைஅணுகினோம். அவர்களோ வேலை இனி காலி இல்லை: ஆட்கள் எடுத்தாகி விட்டது. நீங்கள் கோயம்புத்தூரிலுள்ள கூட்டுறவு வங்கிக் கிளையை அணுகுங்கள்' என்று அனுப்பிவிட்டார்கள்.

அங்கு சென்றாலோ சென்னையில் உள்ள தலைமை வங்கியுடன் தொடர்பு கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார்கள். எனக்கோ நேரில் செல்லபணவசதியில்லாததால் கடிதங்கள் மூலம் தொடர்பு கொண்டேன். இதுவரை எனக்கு எந்தபதிலும் கிடைக்க வில்லை,

நாங்கள் கர்நாடகம் செல்லும் போது ரயிலில் போட்ட லக்கேஜ் பெட்டியை கூட ஒரு ஆண்டு கழித்துத்தான் பெற முடிந்தது.

தற்போது நான் பஸ் கண்டக்டர் லைசன்ஸ் பெற்றிருக்கிறேன். வங்கி எனக்கு மீண்டும் வாய்ப்பு வழங்குமாறு ஏதேனும் பேருந்து போக்கு வரத்து நிறுவனங்களில் வேலை பெற்று தருமா?

—ஐ. கணேசன்

திருச்செங்கோடு

-(முதல் பக்க தொடர்ச்சி)-

பூமிப் பரப்பில்
கால் பதிக்க ஏலாத
பாலஸ்தீனப்
பூக்களோ
இயந்திர துப்பாக்கியோடு
இன்னும்
புதர்களுக்கடியில்
விடுதலைக்காக
காத்திருக்கும்.

○

ஆப்பிரிக்க காடுகளின்
கறுப்பு மலர்கள்
வெள்ளை வெறியில்
கிள்ளப்படும்.

○

இன வெறி
நிற வெறி
மொழி வெறி
என்ன தரப் போகிறதோ?

○

அநாதையாக்கப் பட்டு
அகதி யாகிப் போன
இந்தப் பூக்களுக்கு
அழு குரலையா ?

○

தந்தையின்
அரவணைப்புக்காக
ஏங்கும் இந்த தளிரின்
எதிர்காலம்
யாரிடம் உள்ளது ?

— அ. ஜானி

(குழந்தையின் கையில் தந்தையின் படம்; தந்தையோ இஸ்ரெலிய ஸியோனிஸப் படுகொலையாளர்களால் சுட்டுக் கொல்லப் பட்டார்.)

படம் : 'சாலிடாரிட்டி'

## அகதிகள் வருகை

செப்டம்பர் 2-ந் தேதியில் இருந்து அக்டோபர் முதல் வாரம் வரை 2,385 அகதிகள் முகாமுக்கு வந்துள்ளதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்,

# சென்னையில் தொண்டமான்

இலங்கையில் ஜயவர்தனாவின் அமைச்சரவையில் அங்கம் வகித்துவரும் அமைச்சர் தொண்டமான் அடிக்கடி சென்னை வருவார்கள் போவார்கள். சில சமயங்களில் பத்திரிகைகள் அவரது வருகையைப்பற்றி அமர்க்களப்படுத்தும் சில சமயங்களில் மௌனம் சாதிக்கும். அவர்கள் திருவாய் மலர்ந்த பொன்மொழிகள் பல பத்திரிகைகளில் முக்கியமாக பிரசுரமாகும். ஆனால் அவர் காலத்துக்குக் காலம் கூறும் கருத்துக்களை யாரும் தொகுத்து வைக்கவில்லை என நினைக்கிறோம். அப்படித் தொகுத்து வைத்தால் அவரது கோட்பாடுகள் என்ன கொள்கைகள் என்ன என்று விளங்கிக் கொள்ளலாமல்லவா?

அமைச்சர் தொண்டமானின் உறவினர்கள் பலர் சென்னையில் இருக்கிறார்கள். அவர்களைப் பார்க்க அவர் அடிக்கடி சென்னை வருகிறார். அவரது உடல் நல பரிசோதனைக்காகவும், பயிற்சிக்காகவும் சென்னை வருகிறார். சோதிடர்களைக் கலந்தாலோசிக்கவும் சென்னை வருகிறார். அவரது சொந்த ஊராக (இராமநாதபுரம்-திருப்பத்தூர்)எம். புதூருக்கு வருகிற சமயங்களிலும் சென்னை வந்து செல்கிறார். சென்னையில் வாழுகின்ற இலங்கைத் தமிழ்த் தலைவர்களைச் சந்திக்கவும் தமிழக முதலமைச்சர் உட்பட பல அமைச்சர்களுடன் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனை பற்றிக் கலந்துரையாடவும் சென்னை வருகிறார். புது டில்லிக்குச் சென்று பிரதமரைச் சந்திக்கிற வழியிலும் சென்னை வருகிறார். ரொமேஷ் பண்டாரியின் அழைப்பின் பேரில் வந்ததாகவும் இம்முறை சென்னையில் கூறியிருக்கிறார். இலங்கைத் தமிழர் பிரச்சினையின் தீர்வுக்கான கருத்துப் பரிமாறல்கள் தீவிரமாகவும், தொடர்ச்சியாகவும், திம்பு, தில்லி, சென்னை, கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெறுவதால் இரண்டு கருத்துக்கள் நிலவுகிற இடங்களில் மூன்றாவது கருத்தை முன் வைக்கவும் வருகிறதாகச் சொல்கிறார். ஜயவர்தனாவின் தூதுவராகவும் வருகிறார். இந்திய அரசின் விருந்தாளியாகவும் வருகிறார். தனது சொந்த தேவைகளுக்காகவும் வருகிறார். ஆனால் என்றேனும், எப்பொழுதாவது அவர் வழி நடத்திச் செல்வதாக வற்புறுத்திக் கூறிக் கொள்ளும் இலங்கை மலையகத் தொழிலாளர்களின் பிரச்சனை பற்றி பேசுவதற்காக சென்னை வந்திருக்கிறாரா? ஆம் வந்திருக்கிறார் தொழிற்சங்கங்க தலைவராக மட்டும் இருந்த கால கட்டங்களில் குடியுரிமை பறிக்கப்பட்டு, இந்தியத் தமிழர்கள் அடிமைகளாக கொடுமைப்படுத்தப்பட்ட பொழுது தில்லிக்குச் சென்று மலையக மக்களின் உரிமைக்காகக் கருத்துப் பரிமாறல்கள் நடத்தி உள்ளார். நாடு கடத்தும் இலங்கை-இந்திய உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர், குறிப்பாக அமைச்சரான பின்னர், தொண்டமான் மலையகத் தமிழர்களுக்காக, அவர்களது குடி உரிமைமற்றியோ. அவர்களது மறுவாழ்வுப் போராட்டங்கள் பற்றியோ, இனக்கலவரங்களால் சொத்து சுகமிழந்து அகதிகளாய் தமிழகத்தில் தத்தளிக்கும் எண்ணற்ற இந்தியத் தமிழ் குடும்பங்களைப் பற்றி சென்னையிலோ, தில்லியிலோ பேசியதில்லை. தொண்டமானைத் தலைவராக்கி, சர்வதேச தொழிற்சங்கவாதியாக்கி, ஜயவர்தனவின் அமைச்சராகவும் மாற்றிய சக்தி மலையகத் தொழிலாளர்களின் சக்தி மட்டுமே. வேறொன்றுமில்லை. ஆனால் அவரை ஆளாக்கிய அந்த மக்களைப் பற்றித்தான் அவர் அடிக்கடி மறந்துவிடுகிறார். அவர்கள் விமோசனத்திற்காக பாடுபடத் தவறிவிடுகிறார்.

ஜயவர்தனா உட்பட யார், யாருக்கோ வக்காலத்து வாங்கும் தொண்டமான் அவர் வழி நடத்தும் மக்களைப் பற்றியோ, அவர்களது போராட்டங்களைப்பற்றியோ பேசவோ, விளக்கவோ மறுத்து விடுகிறார். இலங்கைத் தமிழ் அரசியல் தீவிரவாதிகளும் மற்றைய தலைவர்களும்தான், இலங்கைத்தமிழர்களின் விமோசனத்திலும் விடுதலைக்காகவும் தமிழகத் தலைவர்களினிதும், மக்களினதும் ஏகோபித்து ஆதரவும், ஒத்துழைப்பும் அவசியம் என்பதை உணர்ந்து அதன் அடிப்படையில் அரசியல் களம் அமைத்தார்கள். தொண்டமான் இதனை ஒன்றுமே செய்ததில்லை. செய்ய முயன்றதில்லை. செய்ய நினைத்ததில்லை. சிங்களத் தலைவர்களுடன் சல்லாபம் செய்தே சரிக்கட்டி விடலாம் என்று நாற்பதாண்டுகளாக அரசியல் நடத்தி ஏமாந்தவர் தொண்டமான். கடைசியாகப் பெற்ற நன்மை, ஜயவர்த்தனாவின் இனக்கொலை அமைச்சரவையில் இடம் பிடித்ததுதான்.

தொண்டமான் தமிழ் நாட்டில் பிறந்தவர். அவரைப் பின்பற்றும் மலையகத் தமிழ் மக்களுக்கு இந்தியாவில் உற்றார், உறவினர் இன்னும் உள்ளனர். அவர்கள் இன்

**'பிறைசூடி'**

னும் தமிழக மக்கள் என்ற உணர்வுகளை இழக்காத மக்கள். ஆனால் அவர்களது பிரச்சனைகளைப் பற்றியோ, போராட்டங்கள் பற்றியில் தமிழகத்தில் இன்னும் போதிய விளக்கமில்லை. அக்கறையில்லை. தமிழக மக்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பியவர்களே இலங்கைத் தமிழர்களின் தலைவர்கள். இன்றைய அரசியல் போக்கில் மலையகத் தமிழர்களின் உரிமைப் பிரச்சனையும், தமிழீழப் பிரச்சனையோடு இணைத்து செயற்படும் அரசியல் விவேகத்தையும், தீர்க்கதரிசனத்தையும் நாம் வரவேற்க வேண்டும்; பாராட்ட வேண்டும்.

தொண்டமான் செய்யத் தவறியயதை இவர்கள் செய்கிறார்கள். முன்னைய இலங்கைத் தலைவர்களும், மக்களும் மலையகத் தமிழ[illegible] பற்றிப் பாரா முகமாக[illegible]னர்கள். அவர்களது பிரசசனைகளை ஒரு 'அந்நிய' மக்களின் பிரச்சனைகளைப் போலத்தான் அணுகுகிறார்கள். அது அரசியல் சுயநலம். அது குறுகிய அரசியல் சிந்தனை. அதனாற்றான் சிங்களத் தலைவர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி வெற்றியடைய முடிந்தது. சிங்கள சூழ்ச்சிக்குப் பலியானவர்கள்தான்இது எங்கள் பிரச்சனை என்ற முதலாளித்துவ அரசியல், இந்தப் பிரச்சனைக்காகப் பாடுபடுவது எங்களது ஏக போக அரசியல் என்று கூறுவதெல்லாம் அரசியல் அறியாமை. சிங்கள ஏகபோக அரசியல் என்று கூறுவதெல்லாம் அரசியல் அறியாமை. சிங்கள ஏகாதிபத்திய அரசியல் சூழ்ச்சிகளுக்குப் பலியாகி விட்டதற்கு எடுத்துக்காட்டு. ஒரு காலத்தில் தொண்டமானே இதனை உணர்ந்திருந்தார். அதனாற்றான் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியில் மூன்று தலைவர்களில் ஒருவராக தலைமை ஏற்றுக் கொண்டார். தமிழர்களின் தூதுவராக ஜயவர்தனாவிடம் தூது சென்றார். வரலாற்றுப் போக்கில், எவருடைய ஒத்தாசையும் இன்றி, இவ்விரு தமிழ்ப் பிரச்சனைகளும் ஒன்றாக இணைந்துவிட்டன. இனி இவற்றைப் பிரிக்க முடியாது.

மலையகத் தமிழர்களின் பிரச்சனையும், யாழ்ப்பாண, மட்டக்களைப்பு, திரிகோணமலை முஸ்லிம் தமிழர்களின் பிரச்சனையும் ஒருங்கிணைந்த ஒரு பிரச்சனையாகக் கருதி தீர்வு காண்பதே அரசியல் விவேகம். ஜூலை 1983, நமக்கு உணர்த்தியுள்ள பாடம் அதுதான். சிங்கள மக்களினதும் தலைவர்களினதும் சிந்தனைப் போக்கும் இதற்கேற்ப மாற்றமடைந்துள்ளது. சிங்கள அரசியல் இந்த அடிப்படையிலேயே எதிர்காலத்தில் பரிணமிக்கும். இதனை உணர்ந்து கொள்ளுதல் மிக, மிக அத்தியாவசியமாகிறது. **ஒருவன் பிரச்சனை, மற்றவரைப் பாதிக்காது என்ற குறுகிய அடிப்படையில் அமைந்த அரசியல் கோட்பாடுகளாலும்,**

-(8-ம் பக்கம் பார்க்க)-

# இலங்கை-இந்தியர் ஒப்பந்தம்' ஆகி 21ஆண்டுகள் ! இன்னும்"நாடற்றவர்"கள் பிரச்சனை தீரவில்லை

இலங்கையில் ''நாடற்ற மக்களாக'' இருந்த இந்திய வம்சாவழித் தமிழர்கள் சம்பந்தமாக இந்தியப் பிரதமராக இருந்த லால்பகதூர் சாஸ்திரிக்கும் இலங்கைப் பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டார நாயக்காவுக்கும் ஒப்பந்தம் நடந்து 21 ஆண்டுகள் பூர்த்தி ஆகிறது—ஒப்பந்தம் 1964-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் தேதி டில்லியில் நடந்து முடிந்தது.

இந்த ஒப்பந்தப்படி இவர்கள் குடியுரிமை வழங்கப்பட்டு 'நாடற்றவர்கள்' என்ற முத்திரை அழிக்கப்பட்டு விண்ணப்பித்த நாட்டின் குடிமக்களாக்கப்படுவார்கள். இந்தத் திட்டம் 15 ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்படும் என்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

ஆனால் 15 ஆண்டுகளையும் தாண்டி 21-ம் ஆண்டையும் பூர்த்தி செய்து கொண்டு விட்டது. ஆனால் இந்த மக்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் இன்னமும் நாடற்றவர்களாக—நாதியற்ற அரசியல் அனாதைகளாகவே இருக்கின்றனர்.

ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியின் பிழைப்புக்கு வழித்தேடி இலங்கைக்குச் சென்று —அழைத்துச் செல்லப்பட்டு 150 ஆண்டுகளுக்கு மேலாக ஆறேழு தலைமுறையினர்களாக வாழ்ந்தும் 1948-ல் நாட்டுரிமை-ஓட்டுரிமை மறுக்கப்பட்டு நாடற்ற மக்கள் ஆயினர்.

இப்படி நாடற்ற மக்களான 9.75 லட்ச மலையக மக்கள் பிரச்னைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் முகமாகத்தான் 1964-ல் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அப்போதுகூட 8.25 லட்ச மக்கள் பிரச்சனையே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு 1.5 லட்சம் மக்கள் பிரச்சனை பின்னர் பேசப்படும் என்று ஒதுக்கி வைக்கப்பட்டது. (இது என்ன கணக்கோ? திட்டமோ?) 8.25 லட்சத்தில் 5.25 மக்களை இந்தியா ஏற்றுக் கொள்வதென்றும், 3.00 மக்களை இலங்கை ஏற்றுக்கொள்வதென்றும் முடிவானது. 1974 ஜனவரி 27ந் தேதி, அப்போது இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்திக்கும், இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்காவுக்கும் ஒப்பந்தம் நடந்தது. அதில் மிகுதியாக இருந்த 1.5 லட்சம் மக்களில் ஆளுக்குப் பாதி என்று தலா 75 ஆயிரம் பேர்களை இரு நாட்டு அரசுகளும் ஏற்றுக் கொண்டன.

ஒப்பந்தப்படி வருடம் ஒன்றுக்கு 35 ஆயிரம் பேர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கி இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று திட்டம். 1974-ல் ஒப்பந்தம் செய்யப்பட்டபோது மேலும் 10 சதவீத மானோரை அதிகப்படுத்திக்கொள்ள ஒப்புக் கொள்ளப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை 7க்கு 4 என்ற விகிதாச்சாரப்படி குடியுரிமை வழங்குவது, அதாவது 7 பேருக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டு, இலங்கையை விட்டு இந்தியா சென்ற பின்னரே 4 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கும் என்பது.

## குடியுரிமை பெற்றோர்

1979-ம் ஆண்டுடன் இந்த பிரச்சனை முடித்திருக்கவேண்டும். பின்னர் மேலும் 3 ஆண்டுகள் நீடிக்கப்பட்டது. 1981-ம் ஆண்டு அக்டோபர் 31-ந் தேதியுடன் இவ்வொப்பந்தம் முடிவடைகிறது.

ஒப்பந்தம் நடந்து 21 ஆண்டுகள் ஆகியும் இதுவரை பாதித் தொகையினருக்குக் கூட குடியுரிமை வழங்கப்படவில்லை; இரு நாடுகளும் தங்கள் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டியது 6 லட்சம். என்றாலும் இயற்கை அதிகரிப் போடு சேர்த்து 8 லட்சம் பேர்களாவார்கள். இந்த கணக்குப்படிப் பார்த்தால் இலங்கை ஏற்றுக்கொள்ள வேண்டிய 3.75 லட்சத்தோடு இயற்கை அதிகரிப்பும் சேர்ந்தால் 5 லட்சம் பேர்களாகும்.

ஆனால் 1984 டிசம்பர் 31 வரை 1,15,400 குடும்பங்களைச் சேர்ந்த 4,59,327 பேர்கள் மட்டுமே இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டு இந்தியாவுக்கு வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

7 பேருக்கு 4 பேர் என்ற அடிப்படையில் இலங்கையும் குடியுரிமை வழங்கி இருக்கிறது(?), 1981 அக்டோபர் 31-ம் தேதி வரையில் 2,10,687 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கியுள்ளது. இதில் இயற்கை அதிகரிப்பான 48,593 பேரும் அடங்குவர்.

(அதே வேளையில், இலங்கைத் தமிழர் பிரச்சனை தீர்வுக்கு இலங்கை அரசு வகுத்துள்ள நகல் பிரேரணையில் 'இந்திய பிரஜாவுரிமை கோரி விண்ணப்பித்துள்ள இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழியை சேர்ந்த அனைவருக்கும் பிரஜாவுரிமை அளிக்கப்பட்டு இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்ட பிறகு இலங்கையில் இந்திய வம்சாவழியை சேர்ந்த 95 ஆயிரம் பேருக்கு பிரஜா உரிமை அளிக்க இலங்கை அரசு உத்தேசித்திருக்கிறது' (தினமணி செய்தி 10-10-85) என குறிப்பிட்டுள்ளது இங்கு கவனிக்கத் தக்கது.)

ஒப்பந்தம் நடந்து முடிந்து 21 ஆண்டுகள் ஆகியும், அந்த ஒப்பந்தத்திற்கு உட்பட்ட மலையகத் தமிழ் மக்கள் இன்னமும் நாடற்ற மக்களாக இருக்கிறார்கள்.

இந்த ஒப்பந்தம் மட்டுமல்ல இதற்குமுன் உருவாக்கப்பட்ட ஒப்பந்தங்களும், பேச்சுகளும், உடன்பாடுகளும்கூட இம் மக்களுக்கு விடிவு காணவில்லை.

## பழைய பேச்சுகள் உடன்பாடுகள்!

சுதந்திர இலங்கையின் முதலாவது நாடாளுமன்ற தேர்தல் 1947-48-ல் நடந்தது. இத் தேர்தலில், வாக்குரிமை இருந்த மலையகத் தமிழர்கள் தமது சார்பில் 7 பேரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பினர்.

## மோகன்

அந்த வெற்று நிலைக்கவில்லை. இந்த வெற்றியால் இடதுசாரிகள் பலம் பெற்றனர். வலதுசாரியின் அணியான இன்றைய ஆளும்கட்சியான ஐக்கிய தேசீய கட்சியின் தலைவரான டி. எஸ். சேனநாயக்காவுக்கு தனிப்பெரும் வெற்றி கிட்டவில்லை. இதைத் தொடர்ந்து இந்தியத் தமிழர் எதிர்ப்பு மேலும் வேரூன்றத் தொடங்கியது.

1948ல் முதலாவது நாடாளுமன்றம் குடியுரிமை சட்டத்தை நிறைவேற்றியது. அதற்குமுன் 1941-ல் டி.எஸ். சேனநாயகா இலங்கை-இந்திய குடியுரிமை மசோதா ஒன்றைக் கொண்டு வந்தார். இது தொடர்பாக நேருவும்—சேனநாயக்காவும்

கடிதங்கள் மூலம் பேசினர். ஆனாலும், 'இலங்கைக் குடியுரிமை பெறும் இந்தியர்களின் எண்ணிக்கையை பூஜ்யமாக்குவதே எனது குறிக்கோள்' என்று கருத்துக்கொண்டிருந்த சேனநாயக்கா நேருவின் யோசனைகளை ஏற்கவில்லை அதோடு பேச்சு வார்த்தை முறிந்தது.

1949-ம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தானில் குடியுரிமைச் சட்டம் வந்தது. இது இலங்கைக் குடியுரிமைக்கான மனுவைப் பெற 2 வருட அவகாசம் அளித்தது. 8,25,000 பேர்களின் சார்பாக 2 37.000 மனுக்கள் அனுப்பப்பட்டன.

1962 வரை இந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனு செய்ய ஒரு லட்சத்து முப்பத்து நான்காயிரம் பேர்களில் 16,2சதவீதத்தினருக்கு மட்டுமே இலங்கை குடியுரிமை வழங்கப்பட்டது. 1950-லிருந்து 1964 வரை 2.25 லட்சம் பேர்களை இந்தியா தனது குடிகளாக ஏற்றுக் கொண்டது. மற்றவர்கள் அனைவரும் நாடற்றவர்களானார்கள்.

1964க்கு முன்னர் இவர்களைக் குறித்து மூன்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

## குமார்

1953-ல் லண்டனில் நேரு-டட்லி சேனநாயக்கா பேச்சு வார்த்தை நடைபெற்றது. 1954ல் நேரு-கொத்தலாலை ஒப்பந்தம் டில்லியில் கைசாந்திடப்பட்டது. அதில் மிகச் சிலரே இலங்கைக் குடியுரிமை பெற்றார்கள். மீண்டும் 1962ல் டில்லியில் பேச்சு வார்த்தை நடந்தது.

ஆனால் இரு அரசுகளினாலும் சரியான முடிவு காணப்படாததால் நாடற்றவர்களாகவே இருக்கும் நிலைக்கு மலையகத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டார்கள்.

பின்னர்தான் 1964-ல் சிறிமாவோ — சாஸ்திரி, 1974-ல் சிறிமாவோ—இந்திரா ஒப்பந்தங்கள் கைசாத்திடப்பட்டன.

ஆயினும் பிரச்சனை தொடர்ந்த வண்ணம் இருக்கிறது; நாடற்றவர்கள் நாடற்றவர்களாகவே இருக்கிறார்கள்.

## தமிழர் பிரச்சனை

சுதந்திரத்திற்கு முன் அவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தார்களோ அந்த நாட்டில் குடியுரிமை பெற தகுதியுடையவர்கள் என்ற மனித உரிமைகள் சாசனம் இருந்தும் மலையகத் தமிழ் மக்களுக்கு அந்த மனித உரிமைகள் மறுக்கப்பட்டு விட்டது.

1964, 1974-ய் ஒப்பந்தங்கள் நடந்தும்கூட— அதற்கு முன் பேச்சு நடத்தப்பட்டும், 1954-ல் ஒப்பந்தம் நடந்தும் கூட பல லட்சம் மலையக மக்கள் இன்னும் நாடற்றவர்களாகவே இருக்கிறார்கள். **1948ல் இலங்கை உரிமைகள் பெற்று சுதந்திரம் பெற்றது. இலங்கையின் பொருளாதார உயர்வு ஆதாரமாக இருந்துவரும் மலையகத் தமிழ்மக்களோ உரிமைகளை இழந்து சுதந்திரம் இழந்தார்கள்.**

37 ஆண்டுகளாக குடியுரிமை இல்லாத மக்களாக வாழும் இம் மக்கள் பிரச்சனை 1964 ஒப்பந்தம் வரை 'இந்திய வம்சாவழித் தமிழர் பிரச்சனை'யாகவே கருத்தப்பட்டது. இப்போது அது ஒரு படி முன்னேறி, இலங்கைத் தமிழர் பிரச்சனையோடு சேர்ந்த 'தமிழர் பிரச்சனை' யாக மாறி இருக்கிறது.

ஆமை வேகத்தில் செயல்பட்ட 1964, 1974 ஒப்பந்தங்கள் இலங்கைத் தமிழர் பிரச்சனையால் முற்றாக முடங்கி விட்டது.

இலங்கையில் தற்போது நடக்கும்ஈழப்பிரச்சனைகளால் —ஈழப் போராளிகள்—சிங்கள இராணுவ மோதல்களினால் தலைமன்னார் — இராமேசுவரம் கப்பல் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுவிட்டது.

இக்கப்பல் மார்க்கமாக இந்தியா வந்து கொண்டிருந்த 'தாயகம் திரும்பும்' மலையக மக்கள் வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஒப்பந்தப்படி இந்திய குடியுரிமை பெற்ற 84 ஆயிரம்(!)பேர் வரமுடியாத நிலையில் அங்கு செய்து வந்த வேலை அனைத்தையும் இழந்து பொருளாதார நெருக்கடிக்குள்ளான நிலையில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒப்பந்தப்படி இவர்கள் அங்கிருந்து இந்தியா பின்னால் தான் அங்கு இலங்கை குடியுரிமைக்கு மனு செய்திருக்கும் 95 ஆயிரம் பேருக்கு குடியுரிமை கிடைக்கும்.

ஆயினும் இவர்கள் பிரச்சனை இப்போது தீர்வதாக இல்லை. 'இலங்கை தமிழர் பிரச்சனை'க்கு முடிவுகள் ஏற்படும்போது தான் இவர்கள் பிரச்சனைக்கு தீர்வு பிறக்கும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்: இன்றைக்கு இவர்கள் பிரச்சனை வெவ்வேறு பிரச்சனைகள் அல்ல; இணைந்த போராடவேண்டிய பிரச்சனையாக மாறியுள்ளது.

## திம்புவும் மலையக மக்களும்

ஈழப்பிரச்சனை ஆயுதம் தாங்கிய போராட்டமாக வளர்ந்து, 'சர்வதேச பிரச்சனை'யாக மாறி இருக்கிறது. இந்தியா நடுநாயகமாக நின்று தீர்க்குமா என்ற நிலையில் அதன் முயற்சியின் பயனாக இன்று இந்தியா— இலங்கை—ஈழப் போராளிகளுக்கிடையே பேசசு வார்த்தைகள் நடந்து திம்புவில் அது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஈழத் தமிழர் பிரதிநிதிகள் வைத்த 4 கோரிக்கைகளில் மலையக மக்கள் குறித்து கோரிக்கைகளையும் வைக்கத் தவறவில்லை—(1) மலையக மக்களின் குடியுரிமை உட்பட இதர அடிப்படை உரிமைகளையும் நிலை நிறுத்தல் (2)

-( 8-ம் பக்கம் பார்க்க )-

# 'எங்களால் முடியவில்லை'

''ஈழத் தலைவர்கள் மலையக மக்கள் குறித்து பேசுவது கவலையளிக்கிறது.' என்றும் 'எங்கள் பிரச்சனைகளை நாங்களே பார்த்துக்கொள்வோம் என்று தொண்டைமான் சமீபத்தில் இந்தியா வந்தபோது தெரிவித்திருக்கிறார்கள்.

ஒரு புறத்திலே எங்கள் பிரச்சனையை நாங்களே பார்த்துக் கொள்வோம். ஜயவர்த்தனா தீர்த்து வைப்பார் என்று கூறிக்கொள்ளும்அதேவேளையில், 'இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 40 வருடங்களுக்கு பிறகும் இவர்கள் உரிமைகள் **முறையான பிரதிநிதித்துவம் எதுவும்இல்லாமல்எல்லாவகையிலும் பின் தங்கியவர்களாக இருக்கிறார்கள்.** இந்தத் துயர நிலைமை குறித்து செவி சாய்ப்பது இந்தியாவின் கடமை என்றும் (இலங்கை இந்திய சமூக கவுன்சில் இலங்கையிலுள்ள இந்திய தூதுவருக்கு வரவேற்பளித்த போது) பேசியும் உள்ளார்.

அதுமட்டுமல்ல—

''இந்திய வம்சாவழியைச் சேர்ந்த தமிழர்கள் ஏறக்குறைய அடிமைகள் என்ற நிலைக்கு நிரந்தரமாக தள்ளப்பட்டு விட்டார்கள். எங்களுக்கு ஸ்தாபன பலம் உள்ளது. அதிகாரத்தில் உள்ளவர்களின் ஒத்துழைப்பும் இருக்கிறது.

எனினும் இந்திய வம்சாவழியை சேர்ந்த தமிழர்களின் விடுதலையை எங்களால்காண இயலவில்லை என்றால் இவர்களது வருங்காலம் பற்றி என்ன உத்தரவாதம் இருக்க முடியும்'' என்றும் தங்கள் நிலைமைக்கு ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்திருக்கிறார்.




மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களே!

'மக்கள் மறுவாழ்வு' அக்டோபர்'85 இதழில் வெளியிடட திரு. கேசவனின், 'தமிழ் நாட்டில்ஊராட்சி,பேரூராட்சி நகராட்சி, சட்டங்கள்—நோக்கங்கள்—அதிகாரங்கள் — கடமைகள்' கட்டுரை மிகவும் அருமை. படம் பிடித்து காட்டியது போன்ற தெளிவு. ஒரு முறை படித்தாலே மனதில் பதிய வைக்கும் சுருக்கம். சுருக்கமாக இருந்தாலே புரிய வைக்கும் விளக்கம். அனைத்தும் ஒருங்கே இணைந்த சிறப்புச் சிந்தனைக் கட்டுரை. தாயகம்—திரும்பியோருக்கு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் வழிகாட்டியாக விளங்க, 'மக்கள் நல் வாழ்வு' பெற பொது அறிவினை ஊட்டும் 'மக்கள் மறுவாழ்வு' சேவைக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். உங்கள் சேவை என்றும் விளங்க நல்வாழ்த்துக்கள்.

—செல்வி ஜே. தனம்
துறைமங்கலம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

**போராட்டங்களாலும் இருசாராகும் பெரு நஷ்டமடைந்துள்ளார்கள். இருசாராரையும் இணைந்த போராட்டமே உறுதியானது,** செல்லக் கூடியது என்ற உண்மையை மறைந்த தலைவர்கள் செல்வநாயகம், வன்னியசிங்கம் போன்றோம் ஆணித்தரமாக உணர்ந்திருந்தார்கள். அதுவே சரியானது என்பதை அண்மைக்கால அரசியல் ஐயமின்றி நிரூபித்துவிட்டது.

இந்த வரலாற்றுச் சூழ்நிலையில் சென்னைக்கு வந்த தொண்டமான், மலையக மக்கள் பிரச்சனைத் தனியானது, அதனைத் தமிழீழப் பிரச்சனையோடு இணைக்கக் கூடாது என்றுகூறுவது அரசியல் பேதமை. வரலாறு உணராத வறட்டுப் போக்கு. 1977 முதல் ஜயவர்தனாவின் அமைச்சராக இருந்து கொண்டு மலையக மக்களின் உரிமைப் பிரச்சனையில் எவ்விதத் தீர்வும் காணாமல், அதற்காக எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாமல், இன்று இப்பிரச்சனையை இப்போது மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைகளின்போது இணைத்துக் கொள்வது கூடாது என்று கூறுவது அப்பட்டமான அரசியல் துரோகம். சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஏவாலளாக நான் மாறி விட்டேன் என்று இதன் மூலம் தொண்டமான் பறைசாற்றுகிறாரா? மலையக மக்களின் உரிமை பறித்த கொடுமையை எதிர்க்க உலகத்திற்கே உரிமை உண்டு. மலையக மக்களை அடிமைகளாக்கிய ஜயவர்த்தனாவின் கட்சியோடு கை கோர்த்து நிற்கும் துரோகச் செயலைப் புரிந்து கொண்டு, எங்கள் பிரச்சனைகளை நீங்கள் பேசக்கூடாது என்று சொல்ல என்ன தகுதி இருக்கிறது? அதே சமயத்தில் அவர்கள் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு மூன்றாவது கருத்துச் சொல்ல நான் வந்திருக்கிறேன் என்று சொல்வது எவ்வளவு புத்திசாலித்தனம்?

'அவர்கள்' பிரச்சனையில் நீங்கள் எப்படித் தலையிடலாம்? துயரம் தோய்ந்த, சிக்கல் மிக்க இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சனைகளில் ஆழமாக ஈடுபட்டிருப்பவர்க்கு நகைச்சுவை உண்டாக்க அரசியல் கோமாளிகள் தேவைப்படுவார்கள் போலும். அந்தத் தேவையை நிரப்பவும் தொண்டமான் சென்னை வருகிறார் போலும்!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மலையகத்தில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கான வாழ்நிலை உரிமை உண்டென்பதை ஏற்றுக்கொள்ளல் என்பவையே அந்த கோரிக்கைகள்,

ஆனால் இந்தக் கோரிக்கைகளை இலங்கை அரசு நிராகரித்ததோடு அதன் பிரதிநிதியாக வந்து பேசிய ஹெக்டர் ஜயவர்த்தனா கூற்று இங்கு குறிப்பிடத்தக்க ஒன்று:

"குறிப்பிட்ட ஒரே ஒரு சமூகத்திற்கு மட்டும் விசேஷ சலுகைகளை அளிப்பதில் எந்த விதமான அரசியல் தீர்வையும் காணமுடியாது. நாட்டில் தமிழ் பேசும் மக்களின் சார்பில் வாதிடும் உரிமையை இந்த குழுக்களுக்கு மட்டும் அளித்துவிட முடியாது. ஏன் எனில் முஸ்லிம்கள், இந்தியத் தமிழர்கள் போன்ற பிரிவினரும் இருக்கிறார்கள்" என்பதாகும்.

இந்த கருத்து எதைப் புலப்படுத்துகிறது? மலையக தமிழ் மக்களுக்காக—அவர்கள் மத்தியிலிருந்து பேச, அவர்களது உரிமைகளை காக்க-போராட யார் இருக்கிறார்கள் என்பதைத்தான் புலப்படுத்துகின்றது.

சமீபத்தில் இலங்கை அரசு சமர்ப்பித்த ஒரு நகல் பிரேரணையில் மலையக மக்களின் குடியுரிமை பற்றி குறிப்பிட்டிருந்தாலும் திம்புவின் தீர்ப்பே மலையக மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.

இந்த நிலையிலும் கூட மலையக மக்களுக்காக பேச— போராட மலையக மக்களின் சார்பிலிருந்து யாரும் முன்வரவில்லை

ஓரமாய் ஒதுங்கி நின்று புறம் பேசும் நிலையிலேயே காலம் கடத்தி கதாகாலட்சேபம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்,

மலையக மக்களின் ஏகப் பிரதிநிதி-தலைவர் என்று சொல்லிக்கொள்ளும்தொண்டமானைப் போன்றவர்கள்கூட பூனை கண்ணை மூடினால் பூலோகம் இருண்டு விடும் என்பது போல—சேவல் கூவிதான் இந்த உலகமே விடியும் என்பது போல பேச வருகிறார்கள்.

## தொழிற்சங்க தலைமைகள்

மலையக மக்கள் எந்தவிதமான அரசியல் பலமும் இல்லாதவர்கள்; அரசியல் ரீதியான எந்த இயக்கத்திற்குள்ளும் உட்படுத்தப்படவில்லை, ஆனால் தொழிற்சங்க ரீதியான இயக்கங்களுக்குள் ஒன்றுபட்டவர்கள்.

இலங்கையில் இவர்கள் மிகப் பெரிய தொழிலாளர் வர்க்கமாக இருந்தும் கூட இவர்களே — இந்த நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கிய பங்கு வகிப்பவர்களாக இருந்தும்கூட... தொழிற்சங்க அமைப்புக்குள் ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்ட பலமாக நின்றும்கூட இவர்கள் எந்த உரிமைகளையும் பெற முடியவில்லை; தொழிற்சங்கங்களால் சம்பள உயர்வு வேலை வாய்ப்பு போன்ற சாதாரண உரிமைகளைக் கூட வென்றெடுத்துக் கொடுக்க முடியவில்லை,

சுமார் 50 ஆண்டு காலமாக தொழிற்சங்கங்களை நம்பி இருந்தும் கூட இவர்கள் பெற்ற பரிசு 'நாடற்றவர்கள்' என்ற அந்தஸ்தைத்தான்.

குடியுரிமை மறுப்பு. ஒப்பந்தங்கள் மூலம் நாடு கடத்தல். தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டு சிங்கள மக்கள் குடி

-(10-ம் பக்கம் பார்க்க)-

## எனது மறுவாழ்வு அனுபவங்கள்

# வேலை கிடைக்க பத்தாண்டுகள்!

சிறிமாவோ—சாஸ்திரி ஒப்பந்தத்தின் தாயகம் திரும்பிய நான் இன்றைக்கு நீலகிரி உதகமண்டலத்தில் சிங்கோனா துறை அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி செய்து வருகிறேன்.

ஒரு நிரந்தரமான வேலையில் இருந்துகொண்டு உரிய ஊதியம் பெற்று வாழும் நான் எனது கடந்த காலங்களை எண்ணிப் பார்க்கிறேன்.

இலங்கையில், ஊவா மாகாணத்தில் யூரி குரூப் அக்கரத்தன்னை தேயிலைத் தோட்டத்தில் ஒரு தொழிலாளியின் மகனாக பிறந்து வளர்ந்த தோடு—பதுளையில் சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் உயர்நிலை படிப்பை தொடர்ந்த வரை அதுவே வாழ்க்கையாக —உலகமாக வாழ்ந்த நான் 13-9-70 ல் அந்த மண்ணையும் மக்களையும் விட்டு கப்பல் ஏறினேன்.

இராமேசுவரத்து மண்ணை மிதித்தவுடன் அந்த வெண்மணலில் கூட முதலில் நடக்கக் கற்றுக் கொள்ள வேண்டிய புதிய அனுபவம்...

தொடர்ந்து பெற்ற அனுபவங்கள், துன்பங்கள், துயரங்களை எல்லாம் நினைத்துப் பார்க்கிறேன்-

○

எனது சொந்த ஊராகிய தமிழ்நாட்டில் திருச்சி மாவட்டத்திலுள்ள எம். கருப்பம்பட்டிக்கு(17-9-70) வந்த எனக்கு எல்லாம் புதியதாகவே தோன்றியது. குறிப்பாகச் சொல்லப் போனால் பேசுகின்ற தமிழ் சொற்களே புரிந்துகொள்ள சற்று தடுமாறினேன். பின் சொந்த ஊரிலுள்ள பள்ளியில் கல்வி கற்கலானேன். பள்ளிக் கல்வியை முடித்த நான் கல்லூரிப் படிப்பையும் தொட்டு வைத்தேன்.

கல்லூரிப் படிப்பு தொடர முடியாமல் போகவே தபால் மூலமாக ரேடியோ பழுது பார்க்கும் தொழிலை சியமளா ரேடியோ இன்ஸ்டியூட் சென்னையில் அஞ்சல்மூலமாககற்று கொண்டிருந்த நேரத்தில், தந்தியின் மூலமாக திருச்சியில் வேலை வாங்கித் தருவதாக திரு. கு. வேலுசாமி (ஓட்டுநர்) வரவழைத்தார். ஆனால் வேலைக் கிடைக்கவில்லை.

பின் சொந்த முயற்சியில் சின்னையா பிள்ளை சத்திரம் பேருந்து நிலையத்திலுள்ள கடை ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தேன் அதன்பின் நானும் நண்பர் ஒருவரும் நடத்துனர் வேலைக்காக லைசென்ஸ் எடுத்தோம். அப்போது உறையூரிலுள்ள (பல் டாக்டர்) ஒருவரது உதவியுடன் பேருந்து வண்டியில் நடத்துனர் பயிற்சியாளராக சேர்ந்து இரண்டு மாதங்கள் பணி செய்தேன். பின்பு பிடிக்காதக் காரணத்தால் மேற்படி டாக்டர் மூலமாக தெப்பக்குளம் அருகில் உள்ள புத்தகக் கடையில் வேலைக்குச் சேர்ந்தேன். இங்கு மாதச் சம்பளம் ரூபாய் முப்பது. மத்தியானம் ஒரு வேளை அளவுச் சாப்பாடு மற்றும் இரவு பேட்டா அறுபது பைசா என்றும் மற்றவைகள் எதுவும் கிடையாது என்றும் சொன்னார்கள். நான் இதற்கு விருப்பம் தெரிவித்து வேலைக்குச் சேர்ந்தேன். இந்தக்காலக் கட்டத்தில் மறக்க முடியாத நிகழ்ச்சிகளும் நடந்தன.

○

திருச்சியிலிருந்து புறப்பட்டு சொந்த ஊர் வந்த எனக்கு தந்தையின் மூலமாக மேட்டுப்பாளையத்திலுள்ள ஜவுளிக் கடையில் இருபது ரூபாய் மாதச் சம்பளத்திற்கு வேலைக்குச் சேர்ந்த பொழுது எங்கள் குடும்பம் மிகக் கஷ்டமானசூழ்நிலையில் இருந்ததால், என் தாய் மத்தியான சாப்பாட்டிற்காக கொடுக்கும் கம்பஞ்சோறு மற்றும் சோளச் சோற்றை உணவாக உட்கொண்டநேரத்தில்—போதிய சாப்பாடு இல்லாததால்-பசி மயக்கம்; கடையில் இருக்கும் துணிகளின் நிறங்கள் கூட மாறுபட்ட நிறங்களாக தோன்றின: இது காரணமாக கடையின் முதலாளிக்கு நான் வேலைக்கு 'லாயக்கற்றவன்' என்ற முடிவுக்கு ஆளானேன். கடை வேலையல்லாத மற்ற வேலைகளையும் என்னிடத்தில் முதலாளி ஏவுவதைக் கண்டேன். வாழ்க்கை வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் இன்னும்தோற்றமளிக்கின்றன

○

நான் மேட்டுப்பாளையம் கடையில் வேலை செய்து கொண்டு இருக்கும்போது அக்கடைக்கு பெங்களூரிலிருந்து வந்த ஒருவரிடம் பெங்களூர் வந்தால் வேலை கிடைக்குமா எனக் கேட்டபோது, அவர் தனக்கு ஒரு ஆள் தேவை என்பதை தெரிவிக்கவே அவருடன் பெங்களூர் சென்தேன்.

அங்கு அவருடன் பழ வியாபாரம் செய்து வந்த நேரத்தில் ஒரு நாள் மிகப்பழுதான வாழைப்பழங்களை கொடுத்து விற்றுவா என்று சொன்னார்.

டி எஸ்.முருகேசன்
உதகை

நான் அப்பழங்கள் மோசமாக இருந்ததால், எல்லாப் பழங்களையும் அவர் எதிர்பார்த்திருந்த தொகைக்குக் குறைவாக விற்று வந்ததால் என் மீது கோபம் கொண்டு இனி மேல் நீ வேலைக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

மனம்உடைந்த நான் அவர் வீட்டிலிருந்து தெருவுக்கு வந்தேன். தெருவிலுள்ள டீ பார் கடை (சங்கம் கபே) யில் வேலைக் கேட்டேன். எனது நிலையறிந்த அவர் வேலை இருப்பதாகச் சொன்னார். பின் நான் அக்கடையில் வேலைக்குச் சேர்ந்தேன். கடையில் வேலை செய்து கொண்டு இருக்கும்போதே காலில் வீக்கம் ஏற்பட்டதால், குறிப்பிட்ட காலத்திற்குள்வேறுவழியின்றி கடையிலிருந்து வெளியே வந்துவிட்டேன்.

ஒரு மாத இடைவெளிக்குப் பின் காலின் வீக்கம் குணமாகவே மீண்டும் அதேகடைக்குச் சென்றேன். எனக்கு அங்கு வேலை இல்லையென்று கூறி விட்டார்கள். அதன் பின் நான் சிறிய கடைகள் முதல் பெரிய கடைகள் வரை எல்லா கடைகளிலும் வேலைக் கேட்டேன்; எங்கும் இல்லையென்றுச் சொல்லிவிடவே, மீண்டும் வேலைத் தேடி நடக்க ஆரம்பித்தேன்.

○

இனி இங்கு இருந்து பிரயோசனம் இல்லை என எண்ணி, பெங்களூரிலிருந்து மைசூர் சென்று அங்கிருந்து தமிழ்நாட்டிற்கு (நீலகிரிக்கு) சென்றுவிட முடிவு செய்தேன்.

பயணத்திற்கு பணம்...? பசியுடன் நடைதான்—

அந்த முடிவோடு நடந்து வந்த எனக்கு சோர்வு ஏற்படவே, ஒரு நிழலைத் தேடிச் செல்லும்போது, எனது கண்ணுக்கு கர்நாடக காவல்துறை அலுவலகம் இருப்பது தெரிந்தது. அங்கேயும் விடவில்லை. முதலில் ஆங்கிலத்தில் ''குட் மார்னிங்'' என்று ஆரம்பித்தேன். அதன்பின் என் நிலைமையை எடுத்துச் சொன்னேன். உடனே காவலர் ஒருவர் அங்கிருந்த ஒரு பூவாளி எடுத்து என்னிடம் கொடுத்து பக்கத்திலிருந்த கிணற்றையும் காட்டி அங்கிருந்த செடிகளுக்கு தண்ணீர் வார்க்கச் சொன்னார். நான் அதைச் செய்து முடித்ததும் ரூபாய் 2 கொடுத்து 'அதோ டீ கடை; போய் சாப்பிட்டு விட்டு வா. பின் ஏதாவது ஒரு லாரி வந்தால் ஏற்றி அனுப்புகிறேன்'' என்றுச் சொன்னார்.

ஒரு மணி நேரத்திற்குள் ஒரு லாரி ஒன்று வந்தவுடன் அதில் அந்த காவலர் கன்னட மொழியில் ஏதோச் சொல்லவே, அந்த ஓட்டுநர் என்னை ஏற்றிச் சென்றார். நீண்டதூர பயணத்தின் பின் திருமணமண்டபத்தின் அருகே நிறுத்தி, ''தம்பி இறங்கிக்கோ என்றுச் சொன்னார்.

-(அடுத்த இதழில் முடியும்

# சுயமாக தொழில் செய்யலாம்

மக்கள் நலம் கருதி மத்திய-மாநில அரசுகள் பல்வேறுபட்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் சுயமாக தொழில் தொடங்கவும், பொருளாதார அபிவிருத்திக்கும் கடனுதவிகளும், மானியமும் வழங்கி வருகின்றன.

ஒரு புறத்தில் நாட்டின் தொழில் வளம்- பொருளாதாரம் மேம்பாட்டையவும், இன்னொரு புறம் அதன்மூலம் பொதுமக்கள் குறிப்பாக பின்தங்கிய நிலையில் இருக்கும் மக்கள் சுயதொழில் செய்யவும்-வேலை வாய்ப்புகளை பெறவும் - அவற்றின் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரம் உயரவும் வழி கோலுகிறது.

இந்த நோக்கங்களைக் கொண்டு சின்னஞ்சிறு கைத்தொழில்-குடிசை தொழிலிலிருந்து மிகப் பெரிய தொழில்கள்- கனரகத் தொழில்கள் வரை ஆரம்பிக்க கடன்கள், மானியங்கள், பயிற்சிகள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட உதவிகளையும் அளித்து வருகிறது.

ஆனால் இத்திட்டங்கள் வழங்கும் உதவிகள் சலுகைகள் குறித்து பலருக்கு தெரிவதில்லை.

குறிப்பாக தாயகம் திரும்பியோர்கள்,தாம் தாயகம் திரும்பியோர்-தமக்கு அதற்குரிய மறுவாழ்வு உதவிகள் என்ற அளவிலே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிலேயே தமது 'மறுவாழ்வை' அமைக்கவும்-வேலை வாய்ப்புகளை தேடிக் கொள்ளவும்-சுய தொழில்களை நடத்தவும் முனைகிறார்கள்.

ஆனால் அரசு, தாயகம் திரும்புவோர் இந்தியா வந்து ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டால் அவர்கள் தாயகம் திரும்பியோர்களல்ல என்றே கருதுகிறது அதுமட்டுமல்ல அவர்களுக்குரிய உதவிகளும் நிறுத்தப்படுகின்றன.

அவ்வாறு தாயகம் திரும்பி பல ஆண்டுகள் கடந்தவர்களாக பெரும்பான்மையோர் ஆகிவிட்டார்கள். இவர்களில் மறுவாழ்வு உதவிகளை முழுமையாக பெற்றவர்களும் இருக்கிறார்கள் எந்த உதவியும் பெறாது 5 ஆண்டுககு, 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள்.

இவர்கள் எல்லாம் தொடர்ந்து தம்மை தாயகம் திரும்பியோர்கள் என்றோ, அவர்களுக்குரிய மறுவாழ்வு உதவிகளை பெறலாம் என்று நினைத்துக் கொண்டு அதற்காக தமது காலத்தையும், பணத்தையும் விரயம்செய்வது அர்த்தமற்றது.

அனைவருமே 'தாயகத்தில்' காலடி எடுத்து வைத்து விட்டாலே அவர்கள் இந்த நாட்டவர்கள். இந்த நாட்டின் சகல மக்களும் அனுபவிக்கும் எல்லா உரிமைகளையும்-சலுகைகளையும் அனுபவிக்க உரிமையுடையவர்கள்.

தாயகம் திரும்பி பல ஆண்டுகள் அனுபவங்கள் நிறைந்திருந்தாலும், 'ஆரம்ப கால கட்டத்தில் கொண்டு வந்த எல்லாவற்றையும், இழந்திற்கும் நிலையில்' எதுவும் செய்ய முடியாத நிலையில் பல இருக்கிறார்கள்.

அவர்கள் அரசு செயல்படுத்தும் திட்டங்கள் மூலம் உதவிகள் பெற்று சுயமாக ஏதேனும் செய்யலாம்.

ஆனால் அவர்கள்இவற்றை எப்படி அறிந்துக் கொள்வது? என்ன வாய்ப்புகள் இருக்கின்றன? அவற்றிற்கு யாரை அணுகுவது? என்ன செய்யலாம்?என்ற நிலையில் இருக்கிறார்கள்.

அவர்களுக்காகவே இந்தபகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் அரசின் பலவேறுபட்ட திட்டங்கள் பற்றிய தகவல்களையும், விபரங்களையும் வழங்க இருக்கிறோம்.

நீங்கள் உங்களுக்கு வேண்டிய தகவல்களுக்கு, விபரங்களுக்கு எழுதினால் முடிந்த வரை அவற்றை சம்பந்தப்பட்ட அலுவலகங்களோடு தொடர்பு கொண்டு விபரங்களை பெற்றுக்கொடுப்போம்.

அடுத்த இதழில் 'ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி திட்டம்' பற்றியும் அதன் கீழ் பெறக்கூடிய உதவிகள் ஆரம்பிக்கக் கூடிய தொழில்கள் பற்றி எழுதுவோம்.

---

யேற்றப்பட்டதால் வேலையிழப்பு; பெருந் தோட்டங்கள் அழிக்கப்பட்டதன் மூலம் கால காலமாக செய்து வந்த தேயிலை, ரப்பர் தோட்ட வேலை இழப்பு. இனக் கலவரங்கள் மூலம் உடமைகள் உயிர்கள் இழப்புதான்.

தொழிற்சங்கங்களால் இழந்திட்ட உரிமைகளை மீட்டுக் கொடுக்கமுடியவில்லை வர்க்க அடிப்படையில் தொழிலாளர் உரிமைகளையோ—மனிதஉரிமைகளையோ வென்றெடுத்துக் கொடுக்க முடியவில்லை.

## பிரதிநிதித்துவம் வகிக்கவில்லை!

மலையக மக்கள் சம்பந்தப்பட்ட எந்த பிரச்சனைகளில் யாரும் இதுவரை தலைமைத் தாங்க முடியவில்லை; பிரதிநிதித்துவமும் வகிக்கவில்லை.

குடியுரிமை இழந்தபோதும் அதுகுறித்து பேச்சுக்கள் ஒப்பந்தங்கள் நடந்த போதும், தொண்டைமானோ, அஸீஸோ மற்றும் பிற மலையக தலைவர்களோ பிரதிநிதித்துவம் வகிக்க முடியவில்லை. **மலையகப் பிரதிநிதிகள் பங்குகொண்டு நேரு-கொத்தலாவலை ஒப்பந்தமும் சரி, சிறிமாவோ—சாஸ்திரிஒப்பந்தமும் சரி, சிறிமாவோ — இந்திரா ஒப்பந்தமும்சரி நடக்கவில்லை**

மலையக மக்களின் பிரதிநிதிகள் இல்லாமலே நடந்த ஒப்பந்தம் மூலம் மலையக மக்கள் பிரச்சனை தீரவில்லை; 37 ஆண்டுகளாக நாடற்ற மக்களாக, குடியியல், ஜனநாயக. அரசியல் உரிமைகள் அற்ற மக்களாகவே வாழ்கின்றார்கள்.

இந்த ஒப்பந்தம் மலையக சமூகத்தை இருகூறாக பிரித்தது' இலங்கையில் குடியுரிமைக் கோரியவர் அந்த நாட்டிற்குள் அரசியல்சூழ்நிலையில் தமிழர்களாகக் கருதப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டுதமது ''இறைமை''யை இழந்து சிதறுண்டு வருகிறார்கள்.

இந்தியக் குடியுரிமைக்கோரி வந்தவர்கள் இங்கே பல கூறுகளாக பிரிந்து வெவ்வேறு பகுதிகளில் அந்த மக்கள்வாழ்வுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப 'சிறுபான்மைக் குழு'க்களாக மாறியும் தேய்ந்தும் வருகிறார்கள்.

## யார் பேசுவது?

இந்த சூழ்நிலைகளில் மலையக மக்களுக்காக—ஒப்பந்தங்களுக்கு உட்படுத்தப்பட்ட மக்களுக்காக பேசுவது யார்? பிரதிநிதித்துவம் வகிப்பது யார்?

ஈழத் தலைவர்கள் பேசுகின்றார்கள். ஆனால் மலையகத் தலைவர்களுக்கு இது கவலை தருகிறது, 'நீயும் பேசாதே நானும் மூச்சு காட்டவில்லை' என்று இத்தலைவர்கள் இருப்பதன் அர்த்தமென்ன?

தொண்டமான் போன்றவர்கள் மலையக மக்களுக்காக—ஒப்பந்தத்தில் உட்பட்டவர்களுக்காக பேசுவார்களா? பிரதிநிதித்துவம் வகிப்பார்களா? **இவர்களது எதிர்க்காலம் நிலைபாடு குறித்து ஏதேனும் தீர்வு வைப்பார்களா?**

சிறிமாவோ—சாஸ்திரி ஒப்பந்தம் முடிவடைந்து 1984-ம் ஆண்டு அக்டோபர் 31ந் தேதியுடன் 21 ஆண்டுகள் பூர்த்தி ஆகிவிட்டது. ஆயினும் தீராத பிரச்சனையாக இருக்கும் இம் மக்களை நினைவு கூறும் போது இந்தக் கேள்விகள் நமக்கு முன்னே நிற்கின்றன!

✳

# தகவல் பலகை

## வேலை வாய்ப்பு

## TNPSC IV GROUP

### தமிழ்நாடு அரசு பணிகளுக்கான தேர்வு

இது சம்பத்தப்பட்ட தகவலை கடந்த இதழில் பிரசுரித்திருந்தோமல்லவா? இது சம்பந்தமான திருத்தமொன்றை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வானகைக் குழு அளிததுள்ளது.

'நான்காம் தொகுதியில் அடங்கிய இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு தரமற்ற தவறுகள் நிறைந்த விண்ணபபஙகள், விண்ணப்பதாரர்களால் உபயோகிக்கப்பட்டு வருவதாக தெரிய வருகிறது. இதனால் விண்ணப்பங்கள் பிற்காலத்தில் நிராகரிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட ஏதுவாகிறது. ஆகையால் விண்ணபபங்களையும், விண்ணப்பததாரர்களுக்கான அறிக்கையையும தேர்வாணையமே அச்சடித்து விண்ணப்பதாரர்களுக்கு வழங்க முடிவு செய்துள்ளது. ஏற்கனவே விளம்பர எண். 42ல் விளம்பரம் செய்திருந்த அறிக்கை இதன் மூலம் (விளம்பர எண் 43) ரத்து செய்யப்படுகிறது' என்று அறிவித்துள்ள்ளது.

இந்த அறிக்கையின்படி புது விண்ணப்பப் படிவங்கள் ரூ. 2/-க்கான அஞ்சல் அணை செலுத்தினால் தேர்வாணை அலுவலகத்தில் நவம்பர் 1 முதல் கிடைக்கப்பெறும்.

விண்ணப்பங்கள் தேர்வாணையகத்தில் பெறகடைசி தேதி: 9-12-1985.

விண்ணப்பங்கள் கோருபவர்கள் 23-9-85 அன்றோ, அல்லது அதற்கு பிறகோ வாங்கிய ரூ. 2/-க்கான அஞ்சல் ஆணை (POSTAL ORDER) யுடன் சுய விலாசமிட்ட (26X12 செ.மீ.) நீளமுள்ள உறையுடன் தேர்வாணையகத்திற்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்
தமிழ்நாடு அரசு பணியாளர்
தேர்வாணைக் குழு
அரசினர் தோட்டம்
சென்னை 600 002

முகவரிக்கு எழுதி விண்ணப்பப் படிவஙகள் பெற்று அனுப்ப வேண்டும.

## ஆண்டுப் பொதுக் கூட்டம்

எதிர்வரும் 3-11-85 பிற்பகல் 2 மணியளவில் குடிபெயர்ந்தோர் மேம்பாட்டுக்கான சமூக நலச் சங்கத்தின் ஆண்டுக் கூட்டம் சென்னை குரோம்பேட்டை 291, ஜி.எஸ்டி. ரோடில் நடைபெறவிருக்கிறது. ○

-(3-ம் பக்க தொடர்ச்சி)-

இவர்கள் நடந்து கொள்வதில்லை. இதனால் தாயகம் திரும்பியோர் நியாயப்படி கிடைக்க வேண்டிய எந்த உதவிகளையும் பெறமுடியாது இருக்கிறார்கள்.

வாழ வழி இல்லாது வறுமையில் வாழும் இவர்கள் உடலாலும், மனதாலும் பாதிக்கப்பட்ட மக்களாக வாழும்போது இவர்களுக்கு ஏன் குடும்பக் கட்டுப்பாடு. குன்னூர் மஞ்சக் கும்பை போன்ற பகுதிகளில் குடும்பக் கட்டுப்பாடு செய்தால்தான் நிலபபட்டா வழங்குவோம் என்று பிடிவாதம் பிடிக்கின்றனர்.

இன்னும் படுகர் போன்ற உள்ளூர் வாசிகளும், தாயகம் திரும்பியோரும் கொள்வினை கொடுப்பினை செய்து கொள்ளும் அளவிற்கு உறவுகள் பலப்பட்டிருக்கிறது. இவர்கள் மத்தியில் பல திருமணங்கள் நடந்துள்ளன.

எனவே இந்த பகுதியில் தாயகம் திரும்பியோர் குடியேறுவதால் உள்ளூர் மக்கள் அழிக்கப்படுகிறார்கள். அதனால் இருஊராருக்கும் சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன என்பது அபத்தம். இதை சில சமூக விரோதிகள், அரசியல் வாதிகள், அரசு அதிகாரிகளே மூட்டிவிடுகின்றனர்' என்று எம். பி. துரை தெரிவிக்கிறார். ○

## ஓர் வேண்டுகோள்

சுமார் 300ஆதரவற்ற குழந்தைகளுக்கு இலவச உணவு, உடை; இருப்பிடம். கல்வி அளித்து வருவதோடு, திக்கற்ற முதியோர்களுக்குப் அடைக்கலம் கொடுத்து வருகிறது சிவானந்தா சரஸ்வதி சேவாசிரமம்.

ஆண்டுதோறும் தீபாவளி அன்று அவர்களுக்கு புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்புகள் வழங்கி தீபாவளியை சிறப்பாக கொண்டாட பொது மக்கள் பண உதவியோ அல்லது பொருளுதவியோ உதவும் படிக் கேட்டுக் கொள்கிறோம்.

பொதுமக்கள் அளிக்க விரும்பும் நன்கொடை, பணம் பொருள் எதுவாக இருந்தாலும் ஆதரவற்ற அவர்களின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். பொதுமக்கள் தங்களால்இயன்றளவு உதவியை நிர்வாகி, **சிவானந்த குருகுலம், நெ. 20 கம்பர் தெரு, கிழக்குத் தாம்பரம், சென்னை - 600 059.** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

—நிர்வாகி

## கப்பல் சேவை

"நிலமைகள் சீரடையுமானால் அடுத்த ஆண்டு ஜனவரியில் தலைமன்னார்-இராமேசுவரம் கப்பல் (படகு) போக்குவரத்துஆரம்பிக்கப்படலாம்" என்று இராமநாதபுர மாவட்ட ஆட்சியாளர் ராஜீவ் வாலியா நிருபர்களிடம் தெரிவித்துள்ளார் என்று பத்திரிகை செய்தியொன்று கூறுகிறது.

மேலும் தரகர்களிடமிருந்து அகதிகளைக் காப்பாற்ற மண்டபம் அகதிகள் முகாமைச் சுற்றி முள்வேலி போடப்படும் என்றும் அகதிகளுக்கும், அரசு ஊழியர்களுக்கும், சமூக ஊழியர்கள், கடை வைத்திருப்பவர்கள் போன்ற மற்றவர்களுக்கும் பல்வேறு வண்ணங்களில் அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். ○

Editor & Publisher : T. S. RAJU, Gangaiamman kovil Street, Madras- 600 094. Printed: L. S. Srinivasan Jai Kalidas Press, 29, B.E. Colony, 4th Street, Madras-24 Published in Collaboration with the ISLAND TRUST.

தாயகம் திரும்பியோரின்
வழிகாட்டி

மக்கள் மறுவாழ்வு

தொடர்பு கொள்ள :
1, தெற்கு கெங்கையம்மன் கோயில்
2வது தெரு
சென்னை - 600 094

# கல்விச் சலுகைக்காக உச்ச நீதிமன்றத்தில் 'ரிட்' தாக்கல்

கல்விச் சலுகைகள் வழங்கவும், கல்விக்காக கட்டிட வசதியை ஏற்படுத்தித் தரவும் கோரி, உச்ச நீதிமன்றத்தில் 'ரிட்' மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளனர்.

நீலகிரி, கூடலூர், கொளப்பள்ளிப்பகுதியிலுள்ள பிள்ளைகளின் கல்வி வசதிக்காக அப்பகுதியிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளியின் கட்டிடக் குழுத் தலைவர் திரு இராமையா இந்த 'ரிட்' மனுவை தாக்கல் செய்துள்ளார்,

இப்பகுதியிலுள்ள பெரும்பாலும் தாயகம் திரும்பிய மாணவர்களுக்கு கல்விச் சலுகை, 'ஸ்டைபண்டு உதவித்தொகை கொடுக்க வேண்டும் என்று இம்மனுவில் கோரப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் பள்ளியில் பயிலும் 75சதவீதமானவர்கள் அரிசனங்களாக இருப்பதால், இப்பள்ளியை ஆதிதிராவிடர் நலத்துறை ஏற்று நடத்த வேண்டும் என்றும், அவர்களுக்கு ஒரு மாணவர் விடுதியொன்று கட்டிக் கொடுக்க வேண்டும் என்றும், கூடலூர் பஞ்சாயத்து யூனியன் உபரியாக உள்ள 73 லட்சத்தில் பஞ்சாயத்து நடுநிலைப்பள்ளியையும், அரசு உயர்நிலைப் பள்ளியையும் கட்டிக்கொடுக்க தமிழக அரசுக்கு உத்திரவிட வேண்டும் என்று இம்மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

○

## அகதிகள் முகாம்களில் பாதுகாப்பு இல்லை!

இலங்கையிலிருந்து தஞ்சம் புகுந்துள்ள அகதிகள் தங்கியுள்ள சில முகாம்களில் பாதுகாப்பு இல்லை. போதிய பாதுகாப்பு இல்லாததால் திருடுகள் முதலானவைகள் நடக்கின்றன.

சமீபத்தில் சிவந்த குளம் முகாமில் ஒரு குழந்தையின் கம்மலை கழட்டிச் சென்றுவிட்டனர்.

## பள்ளிக் குழந்தைக்கு பதிவு இல்லை

மண்டப முகாமில் தங்கி இருக்கும் அகதிகள் குழந்தைகள் வெளியிடங்களுக்கு படிக்கச் செல்கின்றனர். இவர்களின் பதிவு ரத்து செய்யப்படுகின்றது. இதனால் குழந்தைகளின் கல்விக்கும் மற்றும் தேவைக்குமுரியபொருட்களை மருத்துவ வசதிகளை பெற்றோர்கள் பெற சிரமப்படுகிறார்கள்.

அதுமட்டுமல்ல; முகாம்களில் தங்கியுள்ள ஒவ்வொரு அகதிகள் குடும்பங்களுக்கும் புகைப்படம் எடுக்கப்பட்டு, அவர்களுக்கு வழங்கப்படும் அறிமுக அட்டையில் ஒட்டப்படுகிறது.

வெளியிடங்களுக்கு பிள்ளைகள் படிக்கச் செல்வதால்— சென்றதால் படத்தில் இப்பிள்ளைகள் இடம் பெற முடியாமல் போகிறது. இது நடைமுறை சிக்கல்களை உண்டாக்கும் என்பதால் சம்பந்தப்பட்ட அகதிகள் பெற்றோர்கள் அச்சம் அடைகின்றனர்.

○

## மகனை இழந்த தாய்க்கு இழப்பீடு

லாரி விபத்தொன்றில் இறந்தவரின் தாயுக்கு நஷ்டமாக ரூபாய 19 ஆயிரம கிடைத்தது

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர் திருமதி. தங்கம்மாள் என்ற விதவை. இவருக்கு இரு மகன்கள். அவர்களுடன் நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் எருமேடு மானூர் -என்ற கிராமத்தில் குடியேறினார்.

இவரது மகன்களின் ஒருவரான சிவபாலன் தனியார் ஹைவேஸ் காண்ட்ராக்ட்காரரிடம் வேலைசெய்தார். 4-5-85 அன்று வேலை செய்யும் காண்ட்ராக்ட்காரரின் லாரி விபத்திற்குள்ளானதில் சிவபாலன் பலியானார்.

அவரை நம்பி வாழ்ந்த அவரது தாய் தங்கம்மாள் தொழிலாளர் இழப்பீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். இவரது சார்பில் எ.ஐ.டி.யு.சி. தொழிற்சங்க நீலகிரி மாவட்ட செயலாளர் திரு.டி. பாலகிருஷ்ணன் அவர்கள் நீதிமன்றத்தில் வாதாடினார். எதிர் மனுதாரர் சார்பாக அட்வகேட் ஜேக்கப் மாத்தியூ. அட்வகேட் ஜோசப் மற்றும் அட்வகேட் சுந்தரம் ஆகியோர் வாதாடினர். வழக்கினை விசாரித்த நீதிமன்ற ஆணையர் திரு. சண்முகசுந்தரம் பி.ஏ.பி.எல்.அவர்கள் திருமதி தங்கம்மாளுக்கு, அவரது மகன் இறந்து போனதற்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ. 19,200/- வழங்க உத்தரவிட்டார்.

இது ஸ்தாபனப்படுத்தப்படாத தனிப்பட்ட ஒரு தொழிலாளருக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும். ★